# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam
## (UK Branch) (பிரித்தானியக் கிளை)

000119

சென்னை
22.11.1986

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான திரு.வே.பிரபாகரன் பத்திரிகைகளுக்கு விடுக்கும் அறிக்கை.**

கடந்த இரு வாரங்களாக மத்திய,மாநில அரசுகள் எமதியக்கம்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பெருமளவில் பாதித்துள்ளது. தமிழீழ மக்களை இனவாரியாக ஒழித்துக்கட்ட சிங்கள இனவாத அரசு முழுமூச்சாக முயன்றுவரும் இச்சூழ்நிலையில்,எமது ஆயுதங்களைப் பறித்தும்,எமது தகவல்-தொடர்புச் சாதனங்களைக் கைப்பற்றியும்,எமது நடமாட்டங்களைக் கண்காணித்தும் எம்மில் பல அழுத்தங்களைப் பிரயோகித்தும், மத்திய,மாநில அரசுகள் மேற்கொண்டுவரும் இந்நடவடிக்கையானது சிங்கள அரசின் கையைப் பலப்படுத்துவதோடு தமிழீழ மக்களின் பேரழிவிற்கு வழிவகுப்பதாக அமையும் என அஞ்சுகிறோம்.

இன அழிவை எதிர்நோக்கியிருக்கும் எமது மக்கள் பாரத நாட்டின், குறிப்பாக தமிழ் நாட்டின்மீது அபார நம்பிக்கை வைத்திருந்தார்கள்.வரலாற்று ரீதியாக,கலாச்சார ரீதியாக பாரதத்துடன் ஆழமான ஆன்மீக உறவுகளை வைத்திருக்கும் எமது மக்கள், பாரத நாடு எமது பாதுகாவலராக இருந்துவரும் என நம்பி வாழ்ந்துவந்தார்கள்.

ஆனால்,மத்திய,மாநில அரசுகளின் சமீபத்திய நடவடிக்கைகள் எமது மக்களைப் பாதுகாப்பற்ற பெரும் ஆபத்தான சூழ்நிலையில் தள்ளியுள்ளது. தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் மகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்ட சிங்களஅரசு தமிழ்ப் பிரதேசங்கள்மீது ஓர் பாரிய படையெடுப்பை மேற்கொள்ள ஆயத்தம் செய்துவருகிறது. நேற்று 21.11.86 முல்லைத்தீவில் சிங்கள ராணுவம் பெருந்தொகையான அப்பாவித் தமிழ்மக்கள்மீது பெருமளவில் தாக்குதலை நடாத்தியதாக அறிகிறோம்.

எமதியக்கம்,தமிழ்நாட்டில் எந்தவித சமூகவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அப்படியிருந்தும் எமது ஆயுதங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. அநாதரவான எமது மக்களின் பாதுகாப்பிற்காக வைத்திருந்த ஆயுதங்கள் பறிபோனபோது நாம் மிகவேதனையடைகிறோம். எனினும்,நாம் உறுதி தளரவில்லை. ஆனால் நாம் எமது மக்களோடு வைத்திருந்த தகவல்-தொடர்பு சாதனங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நடவடிக்கையானது மிகவும் பாரதூரமானது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து எம்மை முற்றாக அந்நியமாக்கிவிடும் ஆபத்தான நடவடிக்கையாகவே இதைக் கருதுகிறோம். தமிழீழ மக்கள்மீது இழைக்கப்படும் அநியாயங்களையும்,அட்டூழியங்களையும் உலகத்திற்கு வெளியிடும் ஒரே செய்தித் தொடர்பையும் துண்டித்துவிட்டதால்,இச் செயலானது சிங்கள அரசிற்கு,தமிழீழ மக்கள்மீது கட்டவிழ்த்துவிடும் இனப்படுகொலையை மூடிமறைக்கத் துணைபோவதாக அமையும். இந்நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக நான் இன்று 22.11.86 அதிகாலையிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறேன். தமிழீழ மக்களின் இன்றைய இக்கட்டான நிலையை தமிழ்நாட்டு

(ம.ப.பா)

மக்களிற்கும் உலக மக்களிற்கும் எடுத்துக் காட்டவே நான் இந்தக் கடும் நடவடிக்கையை எடுத்தேன்,

*எமது தகவல் தொடர்புச் சாதனங்கள் எம்மிடம் உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
*எம்மீது போடப்பட்டுள்ள பொலீஸ் கண்காணிப்புகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்,
அல்லாவிடில் நாம் பாதுகாப்பற்ற எமது மக்களிற்காக தமிழீழம் சென்று போராடுவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் நான் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.